சுருக்கம்

உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – தமிழ்நாடு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கை – 2008–2009–ம் கல்வியாண்டு முதல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் – நிர்ணயம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.263 நாள்: 30.6.2008.
ஆனி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.222, உயர்கல்வி (ஜே1) துறை, நாள் 29.6.2002.
2) அரசாணை (நிலை) எண்.154, உயர்கல்வி (ஜே1) துறை, நாள் 4.6.2007.
3) தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.3866/இசிஏ1/08, நாள் 19.5.2008.

----

ஆணை:

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் பி.இ./பி.டெக். முதலாமாண்டு பட்டப் படிப்பு மற்றும் இரண்டாமாண்டு பி.இ./பி.டெக். நேரடி சேர்க்கை ஆகியவற்றிற்கு குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் இனவாரியாக கீழ்க்கண்டவாறு அரசால் நிர்ணயிக்கப்பட்டது:-

குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் (Minimum Eligibility Marks)

| வகுப்பு (Community) | அடிப்படைத் தகுதி | |
|---|---|---|
| | மேல்நிலைக் கல்வி [கல்வி (Academic)] / மேல்நிலைக் கல்வி [தொழிற்கல்வி (Vocational)] / பட்டயம் பெற்றோர் | இளம் அறிவியல் பட்டப் படிப்பில் இறுதியாண்டில் தேர்ச்சி பெற்றவர்கள் |
| பொதுப்பிரிவினர் | சம்பந்தப்பட்ட பாடங்களில் சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் | இளம் அறிவியல் இறுதியாண்டில் சராசரியாக குறைந்தபட்சம் 60 விழுக்காடு மதிப்பெண்கள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | சம்பந்தப்பட்ட பாடங்களில் சராசரியாக 55 விழுக்காடு மதிப்பெண்கள் | இளம் அறிவியல் இறுதியாண்டில் சராசரியாக 55 விழுக்காடு மதிப்பெண்கள் |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | சம்பந்தப்பட்ட பாடங்களில் சராசரியாக 50 விழுக்காடு மதிப்பெண்கள் | இளம் அறிவியல் இறுதியாண்டில் சராசரியாக 50 விழுக்காடு மதிப்பெண்கள் |

| | | |
|---|---|---|
| பட்டியல் இனத்தவர்/ மலைவாழ் பழங்குடியினர் | மேல்நிலைக் கல்வித் தேர்வில் தேர்ச்சி (Mere Pass) | இளம் அறிவியல் இறுதியாண்டில் தேர்ச்சிபெற்றாலே போதும் (Mere Pass) |

2. 6.5.2008 அன்று நடைபெற்ற உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. 1980 வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் 6–ம், அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் 4–ம் சேர்த்து மொத்தம் 10 கல்லூரிகள் மட்டும்தான் இருந்தன. இந்த நிலை மாறி பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 272–ஆக உயர்ந்துள்ளது. 2005–2006–ஆம் ஆண்டில் ஒற்றைச் சாளர முறையில் சிறுபான்மையினர் அல்லாத கல்லூரிகளில் 50%, சிறுபான்மையினர் கல்லூரிகளில் 30% அரசு ஒதுக்கீடாக இருந்த நிலை மாறி, 2006–2007–ஆம் ஆண்டு இந்த அரசு பதவி ஏற்றதில் இருந்து சிறுபான்மையினர் அல்லாத கல்லூரிகளில் 65% அரசு ஒதுக்கீடாகவும், சிறுபான்மையினர் கல்லூரிகளில் 50% அரசு ஒதுக்கீடாகவும் மாற்றி அமைத்துள்ளது. மேலும் 2007–2008–ஆம் கல்வி ஆண்டு முதல் மாணவர்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற அடிப்படையில் நுழைவுத் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் அதிகளவில் சேர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் 2006–2007–ஆம் கல்வி ஆண்டு மாணவர்கள் சேராமல் 19652 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் காலியாக இருந்தன. 2007–2008–ஆம் கல்வி ஆண்டில் 14721 இடங்கள் காலியாக இருந்தன. மேலும் இந்த ஆண்டு புதிதாக அரசு மற்றும் சுயநிதி கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பொறியியல் கல்லூரிகளில் படிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் பொறியியல் கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருப்பதையும் மனதில் கொண்டு இந்த ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான மதிப்பெண்களை குறைப்பதற்கு அரசு முடிவு எடுத்துள்ளது:-

| பிரிவு | மேல்நிலைக் கல்வியில் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண் |
|---|---|
| பொதுப்பிரிவினர் | 60% லிருந்து 55% ஆக |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 55% லிருந்து 50% ஆக |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 50% லிருந்து 45% ஆக |
| பட்டியல் இனத்தவர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் | மேல்நிலை கல்வி தேர்வில் தேர்ச்சி மட்டும் பெற்றால் போதும் |

இதன் மூலம் அதிக அளவில் மாணவர்கள் பொறியியல் கல்வியில் சேர வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது."

3. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

அக்கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, 2008–2009–ஆம் கல்வியாண்டு முதல் பி.இ./பி.டெக். முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு (Lateral Entry) பொறியியல் மாணவர் சேர்க்கை ஆகியவற்றுக்கு கீழ்க்கண்டவாறு குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை நிர்ணயம் செய்து ஆணையிடுகிறது:-

(அ) பி.இ./பி.டெக். முதலாமாண்டு மாணவர் சேர்க்கை:-

| வகுப்பு (Community) | 2008–2009 கல்வியாண்டு முதல் நிர்ணயிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் |
|---|---|
| பொதுப் பிரிவினர் | மேல்நிலைக் கல்வித்தேர்வில் சம்பந்தப்பட்ட பாடங்களில் பெற்ற மதிப்பெண்களின் சராசரி 55% (55% average in the related subjects) |
| பிற்படுத்தப்பட்ட கிறித்துவ வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். | மேல்நிலைக் கல்வித்தேர்வில் சம்பந்தப்பட்ட பாடங்களில் பெற்ற மதிப்பெண்களின் சராசரி 50% (50% average in the related subjects) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் | மேல்நிலைக் கல்வித்தேர்வில் சம்பந்தப்பட்ட பாடங்களில் பெற்ற மதிப்பெண்களின் சாரசரி 45% (45% average in the related subjects) |
| பட்டியல் இனத்தவர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் | மேல்நிலைக் கல்வித் தேர்வில் தேர்ச்சி (Mere Pass) |

(ஆ) பி.இ./பி.டெக். நேரடி இரண்டாமாண்டு (Lateral Entry) மாணவர் சேர்க்கை

| வகுப்பு (Community) | 2008–2009 கல்வியாண்டு முதல் நிர்ணயிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் |
|---|---|
| பொதுப் பிரிவினர் | பட்டயம் (Diploma) / இளம் அறிவியல் (B.Sc. Degree with Mathematics as a subject) இறுதியாண்டில் பெற்ற மதிப்பெண்களின் சராசரி 55% |
| பிற்படுத்தப்பட்ட கிறித்துவ வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். | பட்டயம் (Diploma) / இளம் அறிவியல் (B.Sc. Degree with Mathematics as a subject) இறுதியாண்டில் பெற்ற மதிப்பெண்களின் சராசரி 50% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் | பட்டயம் (Diploma) / இளம் அறிவியல் (B.Sc. Degree with Mathematics as a subject) இறுதியாண்டில் பெற்ற மதிப்பெண்களின் சாரசரி 45% |
| பட்டியல் இனத்தவர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் | பட்டயம் (Diploma) / இளம் அறிவியல் (B.Sc. Degree with Mathematics as a subject) இறுதியாண்டு தேர்வில் தேர்ச்சி (Mere Pass) |

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை/திருச்சிராப்பள்ளி/கோயம்புத்தூர்/திருநெல்வேலி.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிசெயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (உயர்கல்வி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.